வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாமல்லபுரத்திலே பல்லவர்களால் உருவாக்கப்பட்ட சிற்பங்கள் இருக்கின்றன. அவை, கடலிலிருந்து வருகின்ற உப்புக் காற்றால் சிதிலமடைந்து வருகின்றன. அவற்றைப் பாதுகாப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு ஏதேனும் ஆலோசனை வைத்திருக்கிறதா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி கேட்டால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 221, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

221—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***56513—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அந்தியூர் தொகுதி, பர்கூர் மலைக் கிராமத்திலுள்ள அரசு ஆதி திராவிடர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.*

2015 செப்டம்பர் 3]

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், அந்தியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பர்கூர் மலைப் பகுதியில் இயங்கி வரும் பழங்குடியினருக்கான உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளியினை மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப, நிதிநிலையைக் கருத்திற்கொண்டு தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.*

முற்பகல் 10-55

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* 'The Leadership is the capacity to translate vision into reality' *என்ற கூற்றுக்கிணங்க, தலைவர் என்பவர் நிகழ்காலத் திட்டங்களை மட்டுமல்லாது, நாட்டின் வளர்ச்சிக்காக தொலைநோக்குத் திட்டங்களை வகுத்து, அத்திட்டங்களைச் செயல்படுத்துபவரே சிறந்த தலைவராவார் என்ற கூற்றுக்கிணங்க,* Vision *2023 என்ற தொலைநோக்குத் திட்டத்தை அறிவித்து, அத்திட்டத்தை நிறைவேற்ற 24 மணிநேரத்தில் 20 மணிநேரம் உழைக்கின்ற உத்தமத் தலைவி, (மேசையைத் தட்டும் ஒலி) தரணி போற்றும் தங்கத் தலைவி எங்கள் தாய், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அந்தியூர் சட்டமன்றத் தொகுதியிலுள்ள பர்கூர் மலைக் கிராமத்தில் இரண்டு உயர்நிலைப் பள்ளிகளும், ஒரு உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளியும், 22 நடுநிலைப் பள்ளிகளும் மற்றும் 5 தொடக்கப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன. இந்த மூன்று உயர்நிலைப் பள்ளிகளில் சுமார் 700-க்கும் மேற்பட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர் கல்வி பயின்றுவருகின்றனர். மற்ற எல்லாப் பள்ளிகளிலும் சுமார் 4,000 பேர் படித்து வருகின்றனர். மாண்புமிகு அம்மா அவர்கள், கல்வித் துறையில் எண்ணற்ற திட்டங்களைக் கொடுத்தும், 14 விதமான விலையில்லாப் பொருட்களைத் தந்தும், மலைவாழ் மாணவ, மாணவியருக்கு சிறப்புச் சீருடைகளை எல்லாம் தந்த காரணத்தினால், இந்த மலைப் பகுதியில் கல்வி பயிலும் மாணவ, மாணவியரின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது.

மேலும், இப்பகுதியிலுள்ள அரசுப் பள்ளியில் படித்த மாணவி மருத்துவப் படிப்பிற்குத் தேர்வாகியுள்ளார் என்பதை இந்த அவையில் பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன், கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *இந்தப் பகுதியில் எந்தவொரு மேல்நிலைப் பள்ளியும் இல்லை. இங்கு பயிலும் மாணவ, மாணவியர் மேல்நிலைக் கல்வி கற்க வேண்டுமானால், 40 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள அந்தியூருக்குத்தான் செல்ல வேண்டும். இங்கு தொடர் பேருந்து வசதி கிடையாது. அடர்ந்த காட்டுப் பாதை வழியாகத்தான் செல்ல வேண்டும். இவர்களுடைய பெற்றோர்கள், பாதுகாப்பு கருதி, உயர்நிலைப் பள்ளிப் படிப்புடன் நிறுத்தி, இளம் வயதிலேயே திருமணம் செய்து வைக்கின்ற சூழ்நிலையுள்ளது. எனவே, இப்பகுதியிலுள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியரின் நீண்ட நாள் கோரிக்கையான, பர்கூர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி அமைகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 222, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

222—

கிராம நிருவாக அலுவலகக் கட்டடம்

***51374—திரு. ஏ.கே. போஸ்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை வடக்கு தொகுதி, வார்டு எண்கள் 27, 45, 43